Judicial Form No.53
(See Rule 42 )

**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No - 28/2019 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW27 |
| | | Defence |
| | | Court |
| Name | : பார்த்திபன் | |
| Father / Husband Name | : முருகன் | |
| Village | : கம்பம் | |
| Taluk | : தேனி மாவட்டம் | |
| Caste | : | |
| Calling | : காவல் ஆய்வாளர் | |
| Religion | : இந்து | |
| Age | : 43 | |

( 2 முதல் 6 எதிரிகள் ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 18.08.2025

முதல் விசாரணை :–

1) நான் தற்போது தேனி மாவட்டம் கம்பம் வடக்கு காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 08.01.2018 ம் தேதி விருதுநகர் மாவட்ட சைவர் பிரிவு குற்ற பிரிவில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது நரிக்குடி காவல்நிலைய ஆய்வாளர் திரு.நித்திக்குமார் என்பவரது 20.12.2017 ம் தேதியிட்ட வேண்டுகோள் கடிதத்தின் படி தொலைபேசி எண்கள் 9585575582, 9944800232, 8940091969 மற்றும் 9597862949 ஆகிய எண்களுக்குரிய 17.12.2017 ம் தேதி முதல் 20.12.2017 ம் தேதி வரையான காலகட்டத்திற்கான உள், வெளி அழைப்புகள் மற்றும் பயன்பாட்டாளர் முகவரி ஆகிய விபரங்களை கோரி மேற்சொன்ன கடிதத்தினை எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பியிருந்தார்.

2) மேற்படி விண்ணபதினை சம்பந்தப்பட்ட தொலைபேசி நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்து விபரங்களை பெற்று காவல் ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். 9585575582 எண்ணானது கார்த்திக், கதவு எண். 67, பேச்சியம்மன் படித்துறை, மதுரை என்ற முகவரியில் இருக்கும் நபருக்கு சொந்தமானது என்று ஆவணங்களின் அடிப்படையில் தெரிய வந்தது. 9944800232 எண்ணானது குணசேகரபாண்டியன், த.பெ.முனியாண்டி, அய்யனார் கோவில் தெரு, மதுரை என்ற முகவரியில் இருக்கும் நபருக்கு சொந்தமானது என்று ஆவணங்களின் அடிப்படையில் தெரிய வந்தது. 8940091969 எண்ணானது பட்டவன்ரஜனி, த.பெ.முருகன், க.எண்.123, மேலான்தோப்பு, வாய்க்கால்ரோடு, தெற்கு அரசரடி, மதுரை என்ற முகவரியில் இருக்கும் நபருக்கு சொந்தமானது என்று ஆவணங்களின் அடிப்படையில் தெரிய

வந்தது. 9597862949 எண்ணானது இந்திராணி, க.பெ.நம்பிராஜ், சுப்பையாபிள்ளை தோப்பு, வெங்கடசாமிநாயுடு, அக்ரஹாரம், சிம்மக்கல், மதுரை என்ற முகவரியில் இருக்கும் நபருக்கு சொந்தமானது என்று ஆவணங்களின் அடிப்படையில் தெரிய வந்தது.

3) மேற்படி 9585575582 என்ற எண்ணுக்குரிய CDR – Call details records 17.12.2017 மற்றும் 18.12.2017 ம் தேதி ஆகிய இரு தினங்களுக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி 9944800232, 8940091969, 9788869159 , 9597862949, 9751252260 ஆகிய எண்களுக்குள் இரண்டு தினங்களாக உள் மற்றும் வெளி அழைப்புகள் இருந்ததுள்ளதாக தெரிய வருகிறது.

4) மேலும் 9585575582 என்ற எண்ணானது 18.12.2017 ம் அன்று 17.00 மணிக்கு உளுத்திமடை பகுதி டவர் லொக்கேசன் இணைப்பில் இருந்துள்ளது.

5) மேலும் 9944800232 என்ற எண்ணானது 9585575582, 9751252260, 8940091969, 9788869159 ஆகிய எண்களுக்குள் இரண்டு தினங்களாக உள் மற்றும் வெளி அழைப்புகள் இருந்ததுள்ளதாக தெரிய வருகிறது.

6) மேலும் 8940091969 என்ற எண்ணானது 9751252260, 9944800232, 9597862949 ஆகிய எண்களுக்குள் இரண்டு தினங்களாக உள் மற்றும் வெளி அழைப்புகள் இருந்ததுள்ளதாக தெரிய வருகிறது.

7) மேலும் 8940091969 என்ற எண்ணானது 18.12.2017 ம் அன்று 18.00 மணிக்கு திருப்பாச்சேத்தி பகுதி டவர் லொக்கேசன் இணைப்பில்

இருந்துள்ளது.

8) 9585575582, 9944800232, 8940091969 மற்றும் 9597862949 ஆகிய எண்களுக்கு உண்டான 17.12.2017 மற்றும் 18.12.2017 ஆகிய இரு தினங்களுக்கு உண்டான மேற்சொன்ன 4 செல்போன்களுக்குண்டான உள், வெளி அழைப்புகள் விபரம் மற்றும் பயன்பாட்டாளர் விபரங்கள் அடங்கிய ஆவணங்களை ஆய்வாளரிடம் நான் கொடுத்தேன். அவை முறையே **அ.த.சா.ஆ 19 முதல் அ.த.சா.ஆ 22** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

9) போலீசார் விசாரணையில் மேற்சொன்ன 4 செல்போன் எண்களுக்கான நிறுவனத்தின் பெயரை நான் குறிப்பிட்டுள்ளேன். எதிரி பட்டவன்ரஜினி அவர்கள் பயன்படுத்திய செல்போன் எண்ணின் நிறுவனத்தின் பெயரை குறிப்பிட்டு நான் போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ 19 முதல் அ.த.சா.ஆ 22 வரையான ஆவணங்கள் நகல் என்றால் சரிதான். என்னுடைய உயர்அதிகாரிக்கு பவ்வியப்பட்டு நான் ஆவணங்களை அனுசரித்து தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.